**O.S.No.115/2019**

நாள்**- 13.07.2022**

P.W.1- திரு.சுதாகர் இன்று நீதிமன்றத்தில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்குவிசாரணை **(1**ம் பிரதிவாதி தரப்பில்**)**

வாதிக்கு நான் மற்றும் இளைய சகோதரரும் வாரிசுகள். இது என் தாத்தா சொத்து அதனால் எனக்கும் என் தந்தைக்கும் சகோதரருக்கும் சேர்த்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வாதி பிராது சொத்து தனக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரியுள்ளார் என்றும் அவ்வாறு கோர வாதிக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை பட்டாசு தொழில் செய்ய அனுமதி பெற்று அந்த தொழிலை நிறுத்தும் வரை அவர் தொழில் செய்து வந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என் தந்தைக்கு உதவியாளராக சம்பளத்திற்கு வேலை பார்த்தார். 1ம் பிரதிவாதி என் தந்தைக்கு உதவியாளராக வேலை பார்த்தார் என்பதற்கு தொழிலாளர் நல ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தந்தையின் பட்டாசு விற்பனை உரிமம் சரண்டர் செய்து பின்னர் ரத்து செய்யப்பட்டது. அந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2014ம் ஆண்டு 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் இருந்து வெளியேறி சுவாதீனம் ஒப்படைக்கும்படி நான் எழுத்து மூலமாக கடிதம் எதுவும் ஒப்படைக்கவில்லை. 1ம் பிரதிவாதி சம்பளத்திற்கு பணிபுரியும் ஊழியராக இருந்தால் நான் வெளியேற்றி சுவாதீனம் ஒப்படைக்கும்படி கேட்டிருக்க வேண்டியது இல்லை என்று சொன்னால் சரியல்ல. 741/2014 என்ற அசல் வழக்கை 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ளார். அது தள்ளுபடி ஆகிவிட்டு மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனு போட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு நடவடிக்கைகளில் நான் பங்கு ஏற்கவில்லை. பிராது சொத்து எங்கள் குடும்பத்திற்கு

பாத்தியப்பட்டது என்பதை 1ம் பிரதிவாதி ஆட்சேபிக்கவில்லை என்றால் சரிதான். வாடகையை நாங்கள் ஏற்க மறுத்ததால் வாடகையை வைப்பீடு செய்ய 1ம் பிரதிவாதி ஆர்சிஓபி 186/2016 என்ற வழக்கை தாக்கல் செய்து எங்களுக்கு எதிராக உத்தரவு பெற்றார் என்றால் சரிதான். அவர் வாடகைதாரரே அல்ல. நாளது தேதி வரை அந்த வழக்கில் 1ம் பிரதிவாதி வாடகை செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். ஆர்சிஓபி வழக்கின் உத்தரவின் பேரில் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஏன் என்றால் அவரை நாங்கள் வாடகை தாரராகவே ஏற்று கொள்ளவில்லை. சொத்தின் தற்போதைய மதிப்பு ஒரு கோடி இருக்கலாம். நான் பதினெட்டு லட்சத்திற்கு தான் மதிப்பீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கும் வாதிக்கும் இடையே 1996ல் இருந்து வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டு பின்னர் அது தொடர்ச்சியாக புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளது என்றால் சரியல்ல. வாடகை ஒப்பந்தத்தில் உள்ள வாதியின் கையொப்பத்தை கையொப்ப நிபுணருக்கு அனுப்ப அவ்வழக்கின் பிரதிவாதியான நாங்கள் மனு தாக்கல் செய்து அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவின் பேரில் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது வரை 1ம் பிரதிவாதி தான் தாவா சொத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியும் இருந்து வருகிறார். தாவா சொத்தில் அய்யனார் டிரேடர்ஸ் என்ற பெயரில் பெயர்பலகை உள்ளது. அந்த பெயரில் 1ம் பிரதிவாதி தொழில் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக பதிவு சான்று அந்த இடத்தில் தொழில் செய்யும் நபருக்கு தான் உரிமம் வழங்கப்படும் என்றால் சரிதான். தாவா சொத்தின் முகவரியில் 1ம் பிரதிவாதி தொழில் செய்ய அய்யனார் டிரேடர்ஸ் என்ற பெயரில் பதிவு சான்று வழங்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். நான் அதை ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொண்டேன். வாய்மொழியாகத்தான் கேட்டேன். ஆவணங்கள் எதுவும் இல்லை. சொத்து தொடர்பான வரி விதிப்பு ஆவணங்கள் 1971 முதல் 2018 வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2018ம் ஆண்டு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

எங்களது சொத்தின் உரிமையை குறித்து 1ம் பிரதிவாதி கேள்வி எழுப்பாத நிலையில் 1வது பரிகாரத்திற்காக வழக்குமூலம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வாடகைதாரர் என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்து முறையாக வாடகையை செலுத்தி வருவதால் 2வது பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1996 முதல் 1ம் பிரதிவாதி தவறாமல் வாடகை செலுத்தி வருகிறார் என்றும் அவரை தாவா சொத்தில் இருந்து சட்டவிரோதமாக அப்புறப்படுத்த 2014ம் ஆண்டு நாங்கள் முயற்சித்தோம் என்றும் அதனால் தான் 1ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் மீது வாடகைக்கட்டுபாட்டு சட்டத்தின் கீழ் தான் நடவடிக்கை எடுக்க இயலுமே தவிர உரிமையியல் வழக்கு தாக்கல் செய்ய உரிமை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. O.S.No. 741/2014 வழக்கு தாக்கல் செய்யும் முன்பு நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அந்த புகார் பொய்யானது என்பதால் தான் காவல்துறையினர் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அந்த புகார் முடிக்கப்பட்டதாக காவல்துறையினர் உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தனர் என்றால் சரிதான். எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**2**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1ம் பிரதிவாதியின் குறுக்குவிசாரணையை தமதாக ஏற்பதாக கூறியது பதிவு செய்யப்பட்டது

<u>மறுவிசாரை-</u> இல்லை.

ஒப்பம்.சுதாகர்

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxxxxxxxxxxxx

முதன்மை மாவட்ட நீதிபதி,

மதுரை.